# 7 கருணையால் குணமடைதல்

யூதர்களுக்கு ஓய்வுநாள் மிக முக்கிய நாளாக இருந்தது. ஐந்நூல்களுக்கு அதாவது பஞ்ச புத்தகங்களுக்கு ஏற்ப ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதில் யூதர் மிக்க கவனம் செலுத்தி வந்தனர். அவர்கள் ஓய்வு நாளன்று எந்த ஒரு வேலையும் செய்வதைத் தவிர்த்தனர்.

ஆனால் இயேசு அவ்வாறான நீதிச் சட்டங்களின் மத்தியிலும் கருணையுடன் பணி செய்வதில் பின்னடையவில்லை. யூதரின் பலவந்த விமர்சனங்களின் மத்தியிலும் இயேசு ஓய்வு நாளில் நோயாளரைக் குணமாக்கி மனிதருக்குக் கருணை காட்டியமை நற் செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஒரு நிகழ்வை இங்கு ஆராய்வோம்.

**வாசிப்போம்**
**மாற்கு 3:1-6**

இறைவன் ஓய்வுநாளைப் புனிதமாகக் கடைப்பிடிப்பதற்காக ஏற்படுத்தினார். ஓய்வுநாளில் மனிதனால் நல்லவைகளைச் செய்தல் இறைவனின் எதிர்பார்ப்பு ஆகும். ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை என்பதை இயேசு எப்போதும் கடைப்பிடித்தார்.

நாம் வாசித்த நற்செய்திப் பகுதியில் குறிப்பிடப்பட்ட நிகழ்வு அதனை அறிவுறுத்து கின்றது. இயேசு ஓய்வுநாளில் நன்மையானதைச் செய்வதில் ஈடுபட்ட முறையானது நிகழ்வில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஆன்மீக வளர்ச்சிக்குத் தேவையானவைகள் யூத மக்கள் சமூகத்துக்குத் தொழுகை கூடத்தால் வழங்கப்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இயேசு தொழுகைக் கூடத் துக்குச் சென்றார் என நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒருநாள் இயேசு தொழுகைக் கூடத்திற்குச் சென்றார். அங்கு கை சூம்பியவர் ஒருவர் இருந்தார்.

**இயேசு தொழுகைக் கூடத்திற்குள் சென்றபோது மக்கள் அவரைக் கூர்ந்து நோக்கினார். அவர்கள் ஏன் அவ்வாறு செய்தார்கள்?**

- அவரில் குற்றம் சுமத்தும் நோக்குடன்
- ஓய்வுநாளில் கை சூம்பியவரை குணப்படுத்துவாரா என்ற நோக்குடன்

ஓய்வுநாளில் ஏதாவது செயல்களில் ஈடுபடுதல் தண்டனைக்குரித்தான குற்றமென யூதர் விசுவாசித்தனர். இயேசு அவர்கள் நீதிச்சட்டங்களை விமர்சித்த விதங்களை நன்கு அறிந்திருந்தார்.

**இந்த நிலையில் இயேசு என்ன செய்தார்?**

**இயேசு**

- **கை சூம்பியவரை எழுந்து நடுவே நில்லும் எனக் கூறி முன்னால் அழைத்தார்.**
- **மக்களிடம் கேள்வி கேட்டார்.**
- **மக்களின் பிடிவாத உள்ளத்தைக் கண்டு வருந்தினார்.**
- **கை சூம்பியவரைக் குணப்படுத்தினார்.**

ஓய்வுநாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? உயிரைக் காப்பதா? அழிப்பதா? எது முறையென்று இயேசு மக்களிடம் வினவினார். இதன்மூலம் மறைநூல் அறிஞர் நீதிச்சட்டங்களைக் கடைப்பிடித்த விதி முறைகளை இயேசு வினவினார். ஓய்வுநாளில் நற்செயல் புரிதல் இறை சித்தம் என்பதை இங்கு எடுத்துக் காட்டினார். மனிதரின் சிந்தனையில் தவறான நிலையை இயேசு இங்கு திருத்தினார். அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததை எண்ணி மனம் வருந்தினார். எனவே இயேசு கருணையுடன் கை சூம்பியவரை நலமாக்கினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இயேசுவிடம் காணப்பட்ட இறை வல்லமையும் குணப்படுத்தும் வரமும் மக்கள் முன்னிலையில் வெளிப்பட்டது.

**நோயுற்ற மனிதர் என்ன செய்தார்?**

**கைசூம்பியவர்**

- **எழுந்து நடுவே நில்லும் என இயேசு கூறிய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்.**
- **பல்வேறு விமர்சனங்கள் முன்னிலையில் நின்றார்.**
- **கைகளை நீட்டும் என்றார். அவன் கீழ்ப் படிந்து கைகளை நீட்டினான். அவருடைய கை நலமடைந்தது.**

கைசூம்பியவர் இயேசு கூறியவாறு கீழ்படிவுடன் செயற்பட்டமையால் இறையாசி களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடையவனாகினார். அவரது கை நலமாக்கப் பட்டது.

இயேசு நீதிச்சட்டங்களையும் பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் கருத்தில் கொள்ளாது கருணையுடனும் பரிவுடனும் இந்த மனிதரிடம் செயற்பட்ட விதமானது எமது வாழ்வுக்கு நல்லதொரு முன்னுதாரணம் ஆகும்.

இறைவனின் பிள்ளைகளாக ஓய்வுநாளில் நன்மையான செயல்களைப் புரிந்து, அதனைப் புனித நாளாகக் கருதி செயற்படுதல் போன்று ஏனைய நாட்களையும் புனித நாட்களாக மதித்து வாழ வேண்டுமென்பதை நினைவில் கொள்வோம்.

எமது சமூகத்தில் நிறைவான வாழ்வு வாழும்போது சமூகத்தில் தேவை உள்ளவர் களை கவனத்தில் கொள்ளுவோம். அவ்வாறு செய்யும்போது,

- சமூகத்தில் ஏற்படும் தீமையான பிரதிநடத்தைகளைக் கண்டு பின்னடையாதிருப் போம்.
- இயேசுவில் விசுவாசம், நம்பிக்கை, கீழ்ப்படிவு போன்றவற்றை வளர்ப்போம்.
- இயேசுவை திவ்விய வைத்தியர் என விசுவாசிப்போம் அதனைச் சமூகத்துக்கு எடுத்துரைப்போம்.

அதற்காக இறைவனிடம் வேண்டுதல் செய்வோம்.

அன்பான ஆண்டவரே.

உம்மில் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் வாழ அருள்தாரும். எமக்குக் கீழ்ப்படிவின் வாழ்வைத் தந்தருளும். கருணையாலும் அன்பாலும் பரிவாலும் நிரம்பி பிறருக்கு நன்மைசெய்ய உம் அருள் தாரும். நீர் பரம வைத்தியரென உலகுக்கு எடுத்துக்காட்டும் கருவியாக எங்களைப் பாவித்தருளும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பின்னடையாது துணிவுடன் உமக்குப் பணிசெய்திட எங்களுக்கு வரம் தாரும்.

ஆமென்.

### செயற்பாடு

1. கிறிஸ்தவ நம்பிக்கையில் நாள்தோறும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகள் 3 குறிப்பிடுக.
2. கிறிஸ்தவ அன்பின் மூலம் நோயாளருக்காக நாம் செய்யக்கூடிய 3 செயல்களைக் குறிப்பிடுக.